O.S.No. 117/2018 – Date : 27.01.2026

PW1 – நல்லம்மாள்(எ) தங்கமணி

சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு 1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

சேலம் முதலாவது மாவட்ட கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள ஓ.எஸ்.40/2022 வழக்கை இந்த வழக்குடன் ஒன்றாக நடத்த டிரான்ஸ்பர் ஓ.பி மனு தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. 1985ம் வருடத்திலேயே நான் தாவா சொத்திலிருந்து வெளியேறி விட்டேன் என்றால் சரியல்ல. 1985 முதல் இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்னர் வரை நான் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேனா என்றால் இல்லை. இந்த வழக்கிற்கு முன்னர் வேறு எந்த பாக வழக்கும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. 40 வருடத்திற்கு முன்பே நான் தாவா சொத்திலிருந்து விலகி விட்டேன் என்றும் எனவே நான் எந்த பரிகாரமும் கோர முடியாது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள தாவா கால வரையறை சட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனவே நான் பாகம் கோர முடியாது என்றால் சரியல்ல. எனவே வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

2 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

வா.சா.ஆ.1ல் பட்டாவில் சர்வே எண்.14/2ஏ1 ல் 5 பட்டாதாரர்கள்

பெயர்கள் உள்ளது என்றால் சரி. இந்த சர்வே எண்ணில் கண்ட சொத்து 5 பேர்களுக்கு பாத்தியப்பட்து என்றால் சரியல்ல, 4 பேர்களுக்கு பாத்தியப்பட்டது. அந்த 4 பேர் யார் என்றால் கருப்ப கவுண்டர், அய்யண்ணன், வெங்கடாசலம், மோகன் ஆவார்கள். அய்யண்ணனின் அப்பா பெயர் என்ன என்றால் முத்து கருப்ப கவுண்டர். மோகன், வெங்கடாசலம், கருப்பகவுண்டர் ஆகியோர் பெயர்கள் வா.சா.ஆ.1 பட்டாவில் இல்லை என்றால் சரி. மேற்படி பட்டாவில் கண்ட சொத்தின் விஸ்தீர்ணம் என்ன என்றால் தெரியாது, என் வழக்கறிஞருக்குதான் தெரியும்.

வா.சா.ஆ.2 பட்டா 6 பேர்களின் பெயரில் உள்ளது என்றால் சரி. மேற்படி பட்டாவில் கண்ட சொத்து மேற்படி 6 பேருக்கும் பாத்தியப்பட்டதா என்றால் இல்லை. மேற்படி சொத்து 4 பேருக்குதான் பாத்தியப்பட்டது. அவர்களின் பெயர் என்ன என்றால் கருப்ப கவுண்டர், அய்யண்ணன், வெங்டாசலம், மோகன் ஆவார்கள்.

மேற்படி 4 பேருக்கும் இரண்டு சர்வே எண்களிலும் எவ்வளவு சொத்து பாத்தியம் என்றால் ஒவ்வொருவருக்கும் 5 ஏக்கர் பாத்தியம். மேற்படி கருப்ப கவுண்டர், அய்யண்ணன், வெங்டாசலம், மோகன் ஆகியோரை வழக்கில் தரப்பனர்களாக சேர்க்கவில்லை என்றால் சரி. சர்வே எண்.120/1பி, 120/2பி, இரண்டின் சர்வே எண்களின் விஸ்தீர்ணம் தெரியுமா என்றால் தெரியாது.

வா.சா.ஆ.3 பட்டா 11 பேர் பெயர்களின் உள்ளது என்றால் சரி. மேற்படி பட்டாவில் சர்வே எண்.120/4பி, 120/4சி2 கண்டுள்ளது என்றால் சரி. மேற்படி சர்வே எண்களின் விஸ்தீர்ணம் எனக்குத் தெரியாது என்றால் சரி. மேற்படி பட்டாவில் கண்ட பெயர்களில் மகாராணி என்பவரை தவிர மற்ற யாரையும் வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் சரி.

வா.சா.ஆ.4ல் கண்ட சர்வே எண்களில் எது வழக்கு சொத்து என்றால் எனக்குத் தெரியாது. அதனுடைய விஸ்தீர்ணம் என்ன என்றால் தெரியாது. மேற்படி பட்டாவில் கண்ட பழனிசாமி,வரதராஜன் ஆகியோரை வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் சரி.

வா.சா.ஆ.5 ல் 12 பேர்களின் பெயர்களின் பட்டா உள்ளது என்றால் சரி. சர்வே எண்.121/1, 122/3ல் எத்தனை பேருக்கு பாத்தியம் உள்ளது என்றால் தெரியாது. அதனுடைய விஸ்தீர்ணம் எனக்குத் தெரியாது என்றால் சரி. மேற்படி பட்டாவில் கண்ட மற்ற நபர்களை வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் சரி.

வா.சா.ஆ.1 முதல் 5 பட்டாவில் என்னுடைய பெயர் இல்லை என்றால் சரி. தாவா சொத்து விவரத்தில் சர்வே எண்.120/2பி விஸ்தீர்ணம் 1 ஹெக்டேர் 8 ஏர்ஸ் என்றும் அதில் 2 ஏக்கர்தான் தாவா சொத்து என்று சொல்லி உள்ளேன் என்றால் சரியல்ல, 5 ஏக்கர். அந்த 5 ஏக்கருக்கு சக்குபந்தி தெரியுமா என்றால் கிழக்கே மோகன், தெற்கே

வரதராஜ், வடக்கே சின்னதம்பி, மேற்கே ஏரி. இதன் மத்தியில் 5 ஏக்கர் உள்ளது என்றால் சரி. 5 ஏக்கர் யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் கருப்ப கவுண்டருக்கும் வெங்கடாசலத்திற்கும் பாத்தியப்பட்டது. மேற்படி கருப்ப கவுண்டரை வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சேர்த்துள்ளேன்.

குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேண்டுகோளின் பேரில் ஒத்தி வைக்கப்படுகிறது.

Sd/- S.Sumathy,

Principal District Judge, Salem.